**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**O.S.No. 91 /2022**

Deposition of witness **PW2** for Plaintiff and solemnly affirmed and oath for sworn taken file by Tr. R.Sankar, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Reshma | Father's Name | : |
| Village | : | Taluk | : Denkanikottai |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

**நாள்:21.11.2023**

**வாதி முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் 3-ம் தரப்பினர், வா.சா.2 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு ஆங்கிலம் தெரியாது ஆனால் முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்ததால் தான் நான் சாட்சியம் அளிக்க வந்தேன். சார்பதிவாளர் மீது வாதி எதற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியும். வீட்டிற்காக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல தெரியும்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது, மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./-எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**

**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**O.S.No. 91/2022**

Deposition of witness **PW3** for Plaintiff and solemnly affirmed and oath for sworn taken file by Tr. R.Sankar, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Purushothaman | Father's Name | : |
| Village | : | Taluk | : Denkanikottai |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

**நாள்:21.11.2023**

**வாதி முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் 3–ம் தரப்பினர், வா.சா.3 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தை நான் தான் தயார் செய்து கொடுத்தேன். ஆவணம் தயாரித்தவர் என்ற இடத்தில் வா.சா.ஆ.2ல் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். ஆவணம் பதிவு செய்தவற்காக நான் ஆவணத்தை சார் பதிவாளர் அலுவலத்தில் கொடுத்தேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. வாதி என்னை அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்தேன். சார் பதிவாளர் இருவரும் சம்மந்தம் தெரிவித்தால் தான் ஆவணம் பதிவு செய்வார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வராததால் தான் சார் பதிவாளர் ஆவணத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை அழைத்தார்கள் ஆனால் அவர் வரவில்லை. அவர் வராததால் தான் ஆவணம் பதிவு செய்யப்படவில்லை. சார் பதிவாளருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது, மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./–எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**